Newsp aperin Ceylon
P. M. G. NO. H. A
89/300 of 1939.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருகூ] யாழ்ப்பாணம்—சர்வசித்துஜு வைகாசிமீ உஎ ௳ (1947 ஜூன் 10 செவ்வாய்க்கிழமை) [இல கக

## விபூதி மான்மியம்

சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள்

(முற்றொடர்)

விபூதி நிலத்திற் சிந்துவது பெருங் குற்றமாகக் கொள்ளப்படும்; சிந்தினால், சிந்திய நீற்றை எடுத்துவிட்டு அந்தத் தலத்தைச் சுத்திசெய்தலே முறை. ஒருவிரலாலேனும் ஒரு கையாலேனுந் தரித்தல் பிழை: விபூதி நிலத்திலே சிந்தாவண்ணம் அண்ணாந்து சிவ சிவ என்று வலக்கையின் நடுவிரல் மூன்றினாலுந் தரித்தலே சாஸ்திரயுக்தமாம். பராமுகமாக நின்றுகொண்டு ஒருகையினால் விபூதி வாங்குவதும் வாங்கிய திருநீற்றை ஒரு விரலாலே தரிப்பதும் எஞ்சிய விபூதியை வாயினாலே ஊதிவிடுவதும் அல்லது தூணிலேனுஞ் சுவரிலேனும் எறிந்து விடுவதுமாகிய அநாசாரங்கள் இக்காலமலிந்துவருவது வருந்தத்தக்கதம். விபூதிவாங்கும் முறை ஆலயவழிபாட்டுமுறை முதலாஞ் சற்கருமங்கள் பெற்றார் ஆசிரியர் முதலியவர்களாலே போதிக்கப்படுதலோடு அவசியம் பழக்கப்பட்டும் வருதல் வேண்டப்படுவதாம்.

"விரிதரும் புகழ்நீற்றினை யறிந்துமே
லணியா
ரரிதினுற்றநீர் பதிதராய் விடுவரந்
தணர்க்குஞ்
சுருதியோதுநீ றிடாமுகஞ் சுடலையம்
முகத்தைக்
கருதிநோக்கினு மஞ்செழுத்தோது
வர் கற்றோர்"

என்றபடி விபூதி தரியாதவருடைய முகஞ் சுடலைக்குச் சமமாகும் ஆகலால் விபூதிதரித்துக்கொண்டே புறத்திற் புறப்படவேண்டும்.

பிரதிட்டை உற்சவம் சம்புரோக்ஷணம் ஸ்நபனம் பிராயச்சித்தம் பூஜை தியானம் தவம் முதலிய பரார்த்த ஆன்மார்த்தக் கிரியைகளுக்கும் விவாகம் முதலிய கிரியைகளுக்கும் விபூதி அங்கமாவதன்றி கிரியாவதி ஞானவதி தீக்ஷைகளுக்கும் முக்கிய அங்கமாக விளங்குவதும் விபூதியேயாம். இதனோடு உருத்திராக்ஷமும் கொள்க. குமாரதந்திரம் முதலிய ஆகமங்களிலே சிவாசாரியர்களுக்குப் பஞ்சமுத்திரைகள் விதிக்கப்பட்டுள்ளன. அவை உபவீதம் உருத்திராக்ஷம் உஷ்ணீஷம் (தலைக்கட்டு) உத்தரீயம் பஸ்மம் என்பனவாம். இங்ஙனம் பஞ்சமுத்திரைகளைக் கூறிய ஆகமங்கள் ஆசாரியர் விபூதி ருத்திராக்ஷங்களைத் தரித்தவராயிருக்கவேண்டு மென்று விசேடித்துக் கூறுகையினாலே, அவ ற்றின் சிறப்புத் தெற்றென விளங்கும்.

சிவபெருமான் முன்னும், சிவாக்கினி முன்னும் ஆசாரியர் முன்னும் விபூதி அணியற்க. தரிக்கவேண்டுமாயின் முகத்தை மாறிவிட்டுக்கொள்க என்று காமிகாகமஞ் செப்புகின்றது.

"அணியற்க நின்மலன் முன்னழ
லின் முன்னு
முணர்வுதவுந் தேசிகன்முன்னும்"

என்பது சைவசமயநெறி.

இன்னும் அசுத்த பூமியிலும் மார்க்கத்தில் நடக்கும்போதும், சண்டாளர் முன்னும் தரிக்கலாகாது என்று பூர்வகாரணமும் காமிகமும் தெரிவிக்கின்றன.

சந்தியாகால மூன்றினும் ஸ்நானஞ் செய்தவுடனும் ஆவசிய கருமஞ் செய்து சௌசமுடித்து ஆசமித்த பின்னரும், போசனத்துக்கு முன்னும் பின்னும் தீக்ஷையிலாதார் பரிசித்தபோதும் பூனை எலி முதலியவற்றைத் தீண்டியகாலத்தும், இவைபோன்ற காலத்தும் விபூதி யணிதல் அவசியமென்று சுப்பிரபேத முதலின உணர்த்துகின்றன.

வளையாமலும், இடையறாமலும், ஒன்றையொன்று தீண்டாமலும், மிக அகலாமலும் இடைவெளி ஒவ்வோரங்குல வளவினதாகவும் தரித்தல் வேண்டும். நெற்றியில் இரண்டு கடைப்புருவ எல்லை நீளத் தரித்தல் வேண்டும்.

"கதித்திடிற் றவம்போங் குறைந்
திடில் வாணாள்கழியு மிவ்விருவகை
போக்கி
விதித்திடும்படியே விழிக்குநேராக
மனுவொடும் விபூதியைவேய்ந்து"

என பயூரகிரி புராணம் கூறுவதனால், கடைப்புருவ எல்லைக்கு கூடினுங் குறையினும் குற்றமாம்.

திருநீற்றுக்கு விபூதி பசுமம் பசிதம் க்ஷாரம் இரக்ஷை என்னும் பெயர்களுமுண்டு. சகல பாவங்களையும் நீறுக்குவதால் திருநீறென்றும் பசுமமென்றும், சிவத்துவத்தை விளக்கலாற் பசிதமென்றும், உயிர்களது மலத்தைக் கழுவுதலால் க்ஷாரமென்றும் தம்மைத் தரித்தஆன்மாக்களைப் பிசாசு முதலியவற்றா லுண்டாகும் துன்பங்களினின்றுங் காத்தலால் இரட்சை அல்லது காப்பு என்றும், தன்னைத் தரித்தவர்களுக்கு மேலான ஐசுவரியத்தைக் கொடுப்பதால் விபூதியென்றும்வழங்கப்படுகின்றது. இவை பேரூர்ப்புராணம தணிகைப்புராணம் முதலியவற்றால் அறியப்படுகின்றன.

'வெந்துயர் தீர்ப்பது நீறு'
'புன்மை தவிர்ப்பது நீறு'
'போதந் தருவது நீறு'
'பாவ மறுப்பது நீறு'
'அருத்த மதாவது நீறு'
'இருமைக்கு முள்ளது நீறு'

எனவருந் திருவாக்குக்களுங்காண்க.

விபூதி தாரணம் உத்தூளனம் திரிபுண்டரம் என இருதிறப்படும். உதூளனஞ் செய்தன்றித் திரிபுண்டரந் தரித்தல் தானங்கள் சிரம் நெற்றி மார்பு கொப்பூழ் முழந்தாளிரண்டு புயங்கள் இரண்டு முழங்கைகளிரண்டு மணிக்கட்டுகளிரண்டு விலாப்புறங்களிரண்டு முதுகு கழுத்து என்னும் பதினறுமாம். இப்பதினறு தானங்களுள் சிரசிற் றரித்தால் அபுத்தி பூர்வமாகக் கண்டத்திற்கு மேற் செய்த பாவம் நீங்கும். நெற்றியிற்றரித்தால் பிரமனால் எழுதப்பட்ட எழுத்துக்களின் தோஷம் நீங்கும். கண்டத்தில் தரித்தால் விலக்கப்பட்ட உணவை உண்ட குற்றம் நீங்கும். மார்பிலே தரித்தால் மனத்தாலுண்டான குற்றம் போகும். நாபியிற்றரித்தால் குறியினாற் செய்த விஷபதோஷம் போகும். முழந்தாள்களிற் றரித்தால் கால்களாற் செய்த பாபமகலும். குதத்திற்குமேல் தரித்தால் குதத்தினாற் செய்த பாவம் நீங்கும் புயங்களில் தரித்தால் பிறபெண்களைத் தீண்டிய பாவம் நீங்கும்.

(வரும்)

## பிரார்த்தனை

வரும்போம் என்னும் இரு நிலையை மன்னாது ஒரு தன்மைத்தாகிக்
கரும்போ, தேனோ, முக்கனியோ என்னவென்னுட் கலந்து நலம்
தரும் பேரின்பப் பொருளே! நின் தன்னை நினைந்து நெக்குருகேன்;
இரும்போ, கல்லோ, மரமோ என் இதயம் யாதென்று அறியேனே!

உய்யும்படிக்கு உன்திருக்கருணை ஒன்றைக்கொடுத்தால், உடையாய்! பாழும்
பொய்யும் அவாவும் அழுக்காறும் புடைபட்டோடும்; நன்னெறியாம்
மெய்யும் அறிவும் பெறும்பேறும் விளங்கும்; எனக்கு உன் அடியார்பால்
செய்யும் பணியுங் கைகூடும் சிந்தைத் துயரம் தீர்ந்திடுமே.

—ஸ்ரீ தாயுமான சுவாமிகள்

## இன்னேர் பிரச்சினை

### இந்தியாவில் பிரான்சியர் நிலை

பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு 1948-ம் ஆண்டு ஜூன் மாதத்துக்கு முன் வெளியேறப்போவது நிச்சயமாகிவிட்டது. அப்படியானால், இந்தியாவிலே சில பகுதிகளை வைத்துக்கொண்டிருக்கும் போர்த்துக்கீசர் பிரான்சியரின் நிலைமையென்ன? காரைக்கால், புதுச்சேரி என்பன பிரான்சியர் அதிகாரத்திலும், கோவா போர்த்துக்கீசர் அதிகாரத்திலும் இன்று இருக்கின்றன. பிரிட்டிஷார் வெளியேறும்போது, பிரான்சியர், போர்த்துக்கீசர் என்பவர்களும் வெளியேறவேவேண்டும் என்று அந்தப் பகுதிகளில் உள்ள ஜனங்கள் கூறுகின்றனர்.

இவ்விஷயமாகக் காரைக்காலில் உள்ள ஜனங்கள் சார்பாகச் சென்றவாரம் புது டெல்கியில் உள்ள பிரான்சிய இராஜீகத் தூதருக்கு ஓர் மநுச் சமர்ப்பிக்கப்பட்டது.

திருமலைராயன் பட்டினத்தில் சென்றவாரம் பல்லாயிரக் கணக்கான மக்களைக்கொண்ட ஓர் கூட்டங்கூடி, பிரான்சியர்இந்தியாவைவிட்டுவெளியேறவேண்டும், பிரான்சியர் இந்தியாவுக்குப்பூரண சுயராச்சியம கொடுக்கவேண்டுமென்று ஓர்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது,

## முடிந்தது!

### உத்தியோகத்தர் வேலை நிறுத்தம்!

மேமாதம் 30-ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர் வேலைநிறுத்தம் முடிந்துவிட்டது.

சென்ற வெள்ளிக்கிழமை பிற்பகல் வேலைநிறுத்தம்செய்த உத்தியோகத்தர் மகாநாடு ஒன்று கொழும்பிற் கூடியது. வேலைநிறுத்தத்தை ஒழிப்பது என்று அவர்கள் குறித்த மகாநாட்டில் தீர்மானித்தனர் என்று ஓர் செய்தி கூறுகிறது.

வேலைக்கு மீண்டுவரும் கிளார்க்மாரின் விஷயம் மிகவும் அநுதாபத்துடன் சிந்திக்கப்படும் என்றும், அதிகம் கண்டிப்பான நடைவடிக்கைகள் எடுக்கப்படமாட்டா என்றும், பிரதமக் காரியதரிசி ஓர் அறிக்கை விட்டிருப்பதாகத் தெரிகிறது.

## எது பொய்? எது மெய்?

### தொழிலாளர்தான் சுட்டனர்!

—ஸ்ரீ மகாதேவா

சென்ற வியாழக்கிழமை கொழும்பில் நிகழ்ந்த கலகத்தின் பயனாக ஒருவர் இறந்ததும், பலர் காயமுற்றதும் ஞாபகமிருக்கலாம். இக் கலகத்துக்குக் காரணர் யார்? உள்நாட்டு மந்திரி ஸ்ரீ அ மகாதேவா சென்ற வியாழக்கிழமையிரவு, இக் கலகத்தைப் பற்றி ரேடியோவில் விபரித்து, இதற்குக் காரணம் வேலைநிறுத்தம் செய்தவர்களது அடாதசெய்கையே என்று குறிப்பிட்டார்.

ஊர்வலம் செய்வதற்கு வேலைநிறுத்தக்காரர்க்கு உத்தரவளிக்கப்பட்ட

தொடர்ச்சி 4-ம் பக்கம்

### பொலிசாரே சுட்டனர்

—டக்ரர் பெரோரா

குறித்த கலவரம் சம்பந்தமாகச் சமசமாஜிகள் தலைவராய டக்ரர்என். எம். பெரீரா விடுத்திருக்கும் அறிக்கை, ஸ்ரீ அ. மகாதேவாவின் கூற்றுக்கு நேர்விரோதமானது; அவர் கூறியதாவது:

"பொலிசாரிடம் உத்தரவு பெற்று தொழிலாளர் மிகவும் அமைதியான முறையில் கூட்டம் நடக்கவேண்டிய இடத்துக்கு ஊர்வலத்தில் வந்தனர். அந்த இடத்திற்கு நான் சென்று பார்த்தபோது, ஓர்தொகை ஆயுதபாணிகளான பொலிசார்ஊர்வலத்தைத் தடுத்துக் கொண்டிருப்பதைக் கண்டேன். தோட்டத்திற் கூட்டம்வைப்பதே எங்கள் நோக்க மென்பதைத்

(தொடர்ச்சி 4ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்துஞு
வைகாசிமீ உஎவ செவ்வாய்க்கிழமை


## அரசசேவை செய்வோர் தொழில்நிறுத்த முயன்றமை

இலங்கையிலே அரசசேவை செய்வோராகிய உத்தியோகத்தர்கள் தம் கடமையிலே திறம்புதலரிதெனவும் இராசவிசுவாசமுள்ளவர்களெனவும் பெயர் படைத்து வந்தனர்; ஊரவர்களும் அரசாங்க உத்தியோகத்தரில் விசேஷ மதிப்புப் பாராட்டி வந்தார்கள்; இந்த விசுவாசமும் இவர்களை ஊரவர்கள் மதிக்கும் மதிப்பும் யாழ்ப்பாணத்திற் சிறப்பாகவுள்ளன வெனலாம்; இலங்கைத் தேசாதிபதி தொடக்கம், பிரதம நீதியரசர் தொடக்கம், இக்காலத்துள்ள மந்திரிமார் தொடககம் அரசாங்கத்திலே அற்ப வேதனம் பெறும் நீதிஸ்தலச் சேவகன் இறுதியாகவுள்ள எல்லாரும் இலங்கையரசியலை நடத்துபவர், நடத்துதற்குத் துணையாகவுள்ளவர்கள்; இவர்களெல்லாரும் அரசாங்கத்தில் ஒவ்வோர் அம்சங்களாயுள்ளவர்களென்பதுதான் இலங்கையிலேயுள்ள சாமானிய மக்களின் கொள்கையாயிருந்தது; அரசசேவை செய்யும் இவ்வுத்தியோகத்தர்கள் தங்கள் கடமையைச் செய்யத்தவறினல், தங்களுக்கிடையே பிணக்கு நேர்ந்தால் அரச பரிபாலனத்திற்குப் பங்கம் நேருதல்கூடுமென்ற கொள்கையும் இந்நாட்டு மக்களிடையே யுண்டு; இவற்ருேடு மற்றை எந்தத் தொழிலைச் செய்பவர்களும் எவ்வகையான முயற்சிகளைப்பார்ப்பவர்களும் வேலை நிறுத்தஞ் செய்தாலும் அரசசேவை செய்வோர் ஒருபோதும் கடமை நிறுத்துதலைச் செய்யார்களென்பதும் இங்குள்ள மக்களின் நம்பிக்கையாகவிருந்தது; இவற்றிற்கெல்லாம் காரணம், அரசசேவை செய்வோராகிய உத்தியோகத்தர் இப்படித் தம் கடமையை ஏகோபித்துச் செய்யாதொழியுமை இலங்கைச் சரித்திரத்தில் எக்காலத்தாயினும் அறியப்படாமையெனலாம்.

"ஆற்றங்கரையின் மரமும் அரசறிய, வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே — ஏற்றம், உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர், பழுதுண்டு வேறோர் பணிக்கு" எனத் தமிழ் மூதாட்டியாராகிய ஔவைப்பிராட்டியார் பாடியிருப்பவும், இந்த நாட்டிலுள்ள பெற்றோர் தம் கன்னியரை, விவசாயம் வியாபாரம் உபாத்திமைத் தொழில், அரசசேவையல்லாதவேறுஎவ்வகையான சேவையென்னு மிவ்வகையான தொழில்களைச் செய்யும் வாலிபனை, இல்லையேல் ஆடவனைக் காட்டிலும் அரசசேவை செய்பவனுன உத்தியோகத்தனுக்குத் தம் மகளை மணஞ்செய்து கொடுக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு இன்றுங் காணப்படுகின்றனர்; இந்த நோக்கம் சரியானதென நாம் சொல்ல வரவில்லை; அரசாங்க உத்தியோகத்திற்கு இருக்கும் மதிப்பைப் புலப்படுத்துதற்கே இங்கு எடுத்துக் காட்டினேம்.

வியாபார சமுதாயங்களிலும், தேயிலை, றப்பர், தென்னை முதலிய தோட்டப் பகுதிகளிலும், வித்தியாசாலைகள் கல்லூரிகள் முதலிய தாபனங்களிலும், இன்னும் வேறு எந்தவகையான தாபனங்களிலும் கடமை பார்க்கும் உத்தியோகத்தர்கள் கிளார்க்மார்களாயுள்ளவர்கள், அந்த அந்தத் தாபனங்களின் முதலாளிகளும் அதிகாரிகளுமாகவுள்ள அவர்கள் விஷயத்தில் மாத்திரம் தொடர்பும் பொறுப்புமுடையவர்களாவர்; அவர்களுக்கு இளைப்பாறியபின்னர்ப் பெறும் உபகார வேதனம் முதலியனவுமில்லையாகும். ஆனல் எங்கள் அரசாங்கசேவை செய்யும் உத்தியோகத்தர்கள் இலேககர்களாயுள்ளாரெவரும் இலங்கையரசியலைக் குறைவின்றி நடத்துதற்கு இன்றியமையாத் துணையாகவுள்ளவர்களாதலினலே, இவர்கள் தம் மேலதிகாரிகட்குப் பொறுப்புடையராகவும், இலங்கையிலுள்ள மக்களெல்லார் பொறுப்பையும் வகுத்தவர்களாயுமுள்ளவர்கள்; சென்ற வாரந் தாங்கள் தொடங்கியதாகிய "வேலைநிறுத்தம்" என்னும் பயங்கரமான கருமம் ஒருவாரம் நின்று பிடிக்குமானல், இந்தக் கிழமை இலங்கையிலுள்ள மக்கள் யாரிடத்திலே கூப்பனைக் கொடுத்து அது வாயிலாகப் பெறும் அரிசி நெல் மா முதலியவற்றை யாரிடத்திற்போய் வாங்குவது? இந்த இலங்கையானது அன்றடித்து அன்று வாயிலிடும் ஏழைமக்களையே பெரிதுங் கொண்ட நாடாகும்; இவைகளையெல்லாம் எங்கள் அரசாங்க உத்தியோகத்தர்கள் தீர்க்கமாகச் சிந்திக்க வேண்டுமல்லவா? தலைவர்களெனத் தம்மைத் தாமே சொல்லிக்கொண்டு திரியும் பொறுப்பற்றவர்களுடைய சொல்லையும் துர்ப்போதனையையும் விழுங்கிக்கொண்டு சாமானியமான தொழிலாளர்கள் செய்யும் செயலைப் பின்பற்ற முயலல் முறையாகாதல்லவா; அரசாங்க உத்தியோகத்தர்களின் வாழ்க்கை பொருட்செலவோடும் மதிப்போடும் பொறுப்போடும் கூடியதென்பதைஅவர்கள் எந்தநேரமுஞ் சிந்திக்க வேண்டும்,

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு யாதாயினுங் குறைகள் ஏற்பட்டிருந்தால், அக்குறைகளை நீக்கவேண்டிய சாத்வீகமான முறைகளை அநுசரிக்கலாகுமல்லவா? "நல்லாறெழுக்கின்றலைநின்ருர் நல்கூர்ந்தும்— அல்லனசெய்தற்கொருப்படார்" என்பதை எங்கள் தமிழ் மக்களாகிய உத்தியோகத்தர்கள் இப்படியான சமயங்களிற் சிந்திக்கவேண்டும்; நெல்லுக்கு உமியுண்டு, நீருக்கு நுரையுண்டு, சில பூவிலும் முள்ளுண்டு, அதுபோல உத்தியோகங்கள் பார்க்குமிடத்தும் ஏதுங் குறைவுகள் நேருதலுமுண்டு; ஆனல் அப்படி நேர்வனவற்றைப் பொறுத்துக்கொண்டு தத்தம் பொறுப்பையும் கௌரவத்தையும் உத்தேசித்து அபிமானத்தோடும் விசுவாசத்தோடும் கடமை பார்த்தால் வரக்கூடிய இடர் யாதுமில்லையெனலாம்,

# குறிப்புக்கள்

### உடன் விசாரணைபுரிக!

தமது அரசியல்சம்பந்தமான அபிலாஷைகளைப் பூர்த்தியாக்குதற்குப் பொறுப்பற்ற ஓர் சிலதலைவர்களினல் தூண்டப்பட்ட அரசாங்க லிகித மாரின் வேலைநிறுத்தம் ஓய்ந்துவிட்டபோதிலும், கொலன்னவைத் தெருவில் ஓர் யாழ்ப்பாண வாலிபர் பொலிசாரின் தாக்குதற்காளாகி இறந்தமை இங்குள்ளார்க்குப் பெருங் கவலையைக் கொடுத்திருக்கிறது என்று கூறின் மிகையாகாது. குறித்த வாலிபரின் வயது 26 மாத்திரமே என்று சொல்லப்படுகிறது. இவரை இந்த வயதிற் பறிகொடுத்துத் தவிக்கும் பெற்ருேர் சுற்றமித்திரரின் துயர் எத்தகையதாகவிருக்குமென்பதை இங்கே நாம் எடுத்துக்காட்டவேண்டியதில்லை. ஆனல்இந்தத்துக்ககரமான சம்பவத்துக்குப் பொறுப்பாளி யார்? இவ்விஷயத்தில் உள்நாட்டு மந்திரியும் சமசமாஜிகள் தலைவர் டக்ரர் என். எம். பெரீராவும் தனித்தனிவிடுத்துள்ள அறிக்கைகள் ஒன்றற்கொன்று முரணுகவிருக்கின்றன. ஆனல் இரண்டு விஷயங்கள் மாத்திரம் நிச்சயம். ஒன்று குறித்த ஊர்வலம் சட்டசம்மதமானது. இரண்டு, குறித்த வாலிபர் தலையிற் காயம் கண்டிறந்திருக்கிருர். சட்டபூர்வமான இந்தஊர்வலத்திற்சென்ற இந்த வாலிபர் தலையில் துப்பாக்கிச் சூடு படவேண்டியதற்குப் பொறுப்பாளி யாவர்? இது கேவலம் வேடிக்கையான அல்லது அற்பமான விஷயமல்ல என்பதை அரசாங்கத்தார்க்குத் தெருட்ட விரும்புகிறேம். பொலிசார் 25 தரம் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று டக்ரர்பெரீராவினுற் கூறப்படுகிறது. இதன் உண்மை பொய்மையை ஓர் பட்சபாதகமற்ற முறையில் விசாரணை புரியவேண்டும். இவ்விஷயத்தில் இனியும் தாமதப்படுதல் அழகாயிராது.

*
* *

### மானிப்பாய் மிஷன் ஆஸ்பத்திரி

மானிப்பாய் மிஷன் ஆஸ்பத்திரிக்கு இலங்கையரசாங்கம் ஒன்றரை லட்சம்ரூபா மான்யம் அளிக்க நிச்சயித்திருக்கிறது என்று அறிகிறேம். இத்தப்பணம் இலங்கைப் பொது நிதியிலிருந்து கொடுக்கப்படுகின்றதேயன்றி அரசாங்கசபை யங்கத்தவர்களின் சொந்தப் பணத்திலிருந்து கொடுக்கப்படவில்லை. குறித்த ஆஸ்பத்திரி, மதம் மாற்றுவதையேபிரதானலட்சியமாகக் கொண்டுள்ள—செய்யும்சிகிச்சைக்குப்பணம்பெறும்—ஓர் ஸ்தாபனத்துக்குக் கொடுக்கநிச்சயிக்குமுன், அரசாங்கம் ஒன்றுக்குப் பன்முறை யோசித்திருக்கவேண்டும் என்பதே எமது அபிப்பிராயமாகும்; இந்தஆஸ்பத்திரிக்கு அண்மையில் அரசாங்க வைத்தியசாலை ஒன்றுண்டு; அதனைத் தகுந்த முறையில் அமைத்துச் சகல மதத்தினர்க்கும் நன்மை விளைக்கத் தக்க விதத்தில் அரசாங்கம் கருமம் ஆற்றியிருக்கலாம். அப்படிச் செய்வதைவிடுத்து, கிறிஸ்தவர்களால்மாத்திரமே வைத்து நடாத்தப்படும் மிஷன் ஆஸ்பத்திரிக்குப் பண உதவி செய்ய அரசாங்கம் நிச்சயித்தமைக்குக் காரணம் என்ன? மானிப்பாயில் இந்த ஆஸ்பத்திரியைவிட வேறும் ஆஸ்பத்திரிகள் இல்லையா? அரசாங்க வைத்தியசாலையைவிட, 3மைல் தூரத்தில் ஒளாய் ஆஸ்பத்திரி இருக்கிறது. 5 மைல்களுக்கப்பால் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிருக்கிறது. பொதுப்பணத்தை மத ஸ்தாபனங்களின் வளர்ச்சிக்காகச் செலவிடுதல் அழகல்ல என்பதை மாத்திரம் இலங்கை மந்திரசபையினர்க்கு எச்சரிக்கை செய்ய விரும்புகிறேம்.

### "கடமை முடிந்தாலொழிய வீட்டிற்கு விடவேண்டாம்"

சென்றகிழமை சில பட்டினங்களிலே அரசாங்க உத்தியோகத்தர்கள் உத்தியோகம் பார்க்கப் போகாமல் "வேலைநிறுத்தஞ்" செய்து வீட்டிலே நின்றார்களல்லவா; இவர்களைப்பின்பற்றி ஒரு பட்டினத்திலேஉள்ள இரண்டு உத்தியோகத்தர்கள் தாங்களும் கடமையாற்ற உத்தியோகத் தானத்திற்குப் போகாது, வீட்டிலே நின்றுவிடப் பார்த்தார்களாம்; உடனே அந்த உத்தியோகத்தர்களுடைய மனைவிமார் இருவரும் அவர்களைப் பிடித்து ஏதோ வண்டியில் ஏற்றி அவர்கள் உத்தியோகம் பார்க்குந் தானத்திற் கொண்டுபோய் இறக்கி அங்குள்ள அதிகாரிகளிடம் ஒப்புவித்து "இவர்களிடத்தில் இன்று வாங்கவேண்டிய வேலை முழுவதையும் வாங்கிக்கொண்டல்லாமல் வீட்டிற்குவர விடாதீர்கள்" என்று சொல்லி அங்கே விட்டுத் தாங்கள் மீண்டுவிட்டார்களாம்; இச்செயலைப் பார்க்கும்போது பள்ளிக்கூடத்திற்கும் போகாமற் கள்ளம் பண்ணும் பிள்ளைகளைச் சிலசமயத்திலே தாய்மார் பிடித்துக்கொண்டுபோய் உபாத்தியாயரிடம் ஒப்புவித்து "இந்தப் பிள்ளையை நல்லாய்அடித்துப் படிப்பியுங்கள்" என்று சொல்லிவிட்டு மீண்டுவருஞ் செயலை நினைப்பூட்டுகின்றது; இப்பெண்களிருவரையும்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

# கடைசித்தினம்

### இன்று வேலைக்குத் திரும்பிவிட வேண்டும்

அரசாங்க உத்தியோகத்தர் வேலைநிறுத்தம் ஓய்ந்துவிட்டது சென்ற சனிக்கிழமையும் திங்கட்கிழமையும் 100-க்கு 90 விகிதமானவர்கள் தங்கள் வேலைத்தலங்களுக்குப் மீண்டுவிட்டனர்.

இன்று காலை 10 மணிக்குமுன் மீதிப்பேரும் வேலைக்கு வந்துவிடவேண்டும். அன்றேல், அவர்கள் வேலையினின்றும் விலகியவராகக் கருதப்பட்டு அவர்கள் மீது கண்டிப்பான நடைவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமக்காரியதரிசி ஓர் அறிக்கை விடுத்திருக்கிருர்,

இது இவ்வாருக, அரசாங்கக் கிளாக்குமார் வேலைக்கு மீண்டுபோவதைத் தடுக்க ஓர்சிலர் பகிரதப் பிரயத்தனம்செய்து வருகின்றனர் என்று கொழும்பு 'டைம்ஸ்' பத்திரிகை கூறுகிறது.

சென்ற சனிக்கிழமை கும்பனித்தெருவில் நிகழ்ந்த ஓர்கூட்டத்தில், கிளார்க்மார் வேலைநிறுத்தம் தோல்வியடைந்துவிட்டதென்றும், இனி அவர்கள் சமாதானமாக வேலைக்குத் திரும்புவதே மேல் என்றும் ஓர் சமதர்மி புத்திமதி கூறினராம்.

சென்ற சனிக்கிழமை கால்பேஸ் மைதானத்தில் நிகழ்ந்த பெரிய கூட்டம் ஒன்றில் டக்ரர் என். எம். பெரீரா கிளார்க்குமார் இன்னும் தோல்வியடையவில்லை என்றும், அவர்கள் வேலைக்குத் திரும்பக் கூடாதென்றும் வேண்டினர். எது எப்படியிருந்தபோதிலும், தாம் செய்த வேலைநிறுத்தம் பிழையானதென்றும், ஆகவே இனி ஒழுங்காக வேலைக்குப் போகவேண்டுமென்றும் கிளாக்குமார் உணரத் தொடங்கிவிட்டனர் என்று ஓர் செய்தி கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதற்கும் வகுப்பு வாதம்?

## இன்று இலங்கையில் நிகழும் தீமை!

(நமது அரசியல் நிருபர் எழுதுகிறார்)

அரசாங்கக் கிளார்க்குமார் ஒருவாறு மெல்லமெல்லவாக வேலைக்குத் திரும்புகின்றனர். இது ஓர் சந்தோஷமான செய்தி; இதனை இலங்கைமக்கள் யாவரும் வரவேற்கவே வேண்டும். அரசாங்கமும் பழிக்குப்பழி வஞ்சம் தீர்த்தல் என்னும் கொள்கையை விடுத்துத் தாராள மனப்பான்மை கொண்டு, வேலைக்குத் திரும்பி வரும் அரசாங்க உத்தியோகத்தர் விஷயத்தில் கருமம் ஆற்றுவர் என்று காத்திருக்கிறோம். இது இவ்வளவில்நிற்க, அரசாங்க உத்தியோகத்தர் வேலைநிறுத்தம் செய்தமைக்குக் காரணம் என்ன? அக்காரணம் ஆதாரபூர்வமானதா என்பதை அரசாங்கமும், இலங்கை மந்திரிசபையும் இனியாவது ஆராயவேண்டும். அரசாங்க உத்தியோகத்தர் தம் லட்சியத்தில் தோல்வியடைந்துவிட்டனர். ஆகவே, அவர்கள் கோரிக்கையை இனிப் பூர்த்தி செய்யக்கூடாது என்று சேனநாயக்கா அரசாங்கம் நினைக்குமானல், அது ஈற்றில் தன்னையே ஏமாற்றிக்கொள்வதாக முடியும். ஊழியர்கட்கிடையே அதிருப்தி ஏற்பட ஒருபோதும் எந்த எஜமானனும் விடவொண்ணுது. அந்த அதிருப்திக்கான காரணங்களை ஆராய்ந்து நோக்கவேண்டும்; அன்றேல் எஜமானனுக்கும் ஊழியனுக்குமிடையே பரஸ்பரம் விசுவாசம் இருக்கமாட்டாது.

o

### வேலைநிறுத்தக் காரணம்

அரசாங்க உத்தியோகத்தர்கள் கல்வியறிவு, அநுபவமற்ற ஏனைய தொழிலாளர்களைப் போன்றவர்களல்லர். எனவே, சமசமாஜிகளாலும், சமதர்மிகளாலும் தூண்டப்பட்டுத்தான் அவர்கள் வேலைநிறுத்தம் செய்தனர் என்று சேனநாயக்காக் கோஷ்டி இன்று கூறுதல் பொருந்தாது. கல்வியறிவு, ஆற்றல், அநுபவம் படைத்துள்ள அரசாங்க உத்தியோகத்தர் இன்றே தொழிற்சங்க உரிமைகளுக்காக வாதாடும் காரணம் என்ன? இன்றுள்ள அரசாங்கசபையும்மந்திரசபையும் இலங்கையைப் பாழும் தரித்திர நிலையிற் கொண்டுபோய் விட்டன; இப்போது சேனநாயக்காக் கோஷ்டி வகுத்துவைத்திருக்கும் திட்டங்களை அமுல் நடத்துவதில், இலங்கை இன்னும் சிலமாத காலங்களில் முன்னொருபோதும் இல்லாத தரித்திர நிலையை அடையப்போகிறது. இந்தத் தரித்திர நிலைமையைச் சமாளிப்பதற்கு, இனி வரவிருக்கும் அரசாங்கம் பலவிதமான முறைகளைக் கையாளக்கூடும். இப்போது அரசாங்க உத்தியோகத்தர்க்கு அளிக்கப்படும் சலாக்கியங்களை நீக்கிப் பணநிலையைச் சமாளிப்பதற்கு அடுத்த அரசாங்கம் நிச்சயிக்கலாம் இலங்கையின் வருமானத்தில் 100-க்கு 80 விகிதத்தை இலங்கை உத்தியோக வர்க்கம் விழுங்குகிறது என்ற முறைப்பாடு இப்போதே ஏற்பட்டுவிட்டது. ஆகவே, செலவினங்களைக் குறைப்பதற்காக, உத்தியோகத்தர் வேதனவிகிதத்தைக் குறைக்கலாம்: அவர்களுக்குக் கொடுக்கப்படும் பஞ்சப்படியைத் தவிர்க்கலாம்; பல உத்தியோகத்தரை நீக்கலாம்; இன்னும் சிலரை இளைப்பாற்றலாம் இப்படியெல்லாம் அடுத்த அரசாங்கம் செய்யமாட்டாது என்பதற்கு என்ன உத்தரவாதம்? ஆனல் அரசாங்க உத்தியோகத்தர்க்கிடையே ஓர் தொழிற்சங்கம் இருக்குமானுல் அரசாங்கம் இப்படியான கருமங்களைத் தன் இஷ்டப்படி செய்யமுடியாது; எனவே, வருமுன் பாதுகாக்கவேண்டும் என்ற ஒரு கொள்கையைக் கடைப்பிடித்தே அரசாங்க உத்தியோகத்தர் தொழிற்சங்க உரிமைகள் கோரி, இவ்வேலைநிறுத்தத்தை நடாத்தினர் அன்றிச் சமதர்மிகள் தூண்டுதலாலும், சமசமாஜிகள் கிளர்ச்சியாலும் அல்ல என்பதை நாம் ஒவ்வொருவரும் அவதானித்துக்கொள்ளல் வேண்டும்

o

### இதிலும் வகுப்புவாதமா?

ஸோல்பெரி அரசியலுடன் வகுப்புவாதத்துக்குச் சாவுமணி அடிக்கப்பட்டுவிடும் எனச் சகலரும் எதிர்பார்த்திருந்தனர் ஆனல் வகுப்புவாதம் என்னும் பைசாசத்தை இறக்கவிடாமல் அதற்கு உயிர்கொடுத்து. அதன்மூலமாக இந்த நாட்டுக்குக் கெடுதி விளைக்கவே ஓர்சிலர் கங்கணம் கட்டியிருக்கின்றனர். இலங்கையில்நிகழும் எந்தக்கருமத்திலும் வகுப்புவாதம்என்னும் விஷத்தையூட்ட இவர்கள் தயாராக இருக்கின்றனர், இப்போது நிகழ்ந்து முடியவிருக்கும் உத்தியோகத்தர் வேலைநிறுத்தம், சிங்கள மந்திரசபையைக் கவிழ்க்கத் தமிழ்க் கிளார்க்குமாராலே ஆரம்பிக்கப்பட்டது என்று ஓர் சிங்களப் பத்திரிகை உளறிக்கொட்டியிருக்கிறது. கிளார்க்குமாரில் அநேகர் தமிழர், அவர்களைக் கெடுக்கவே இந்த வேலைநிறுத்தம் சிங்களக் கிளார்க்குமாரால் ஆரம்பிக்கப்பட்டு இடையிற் கைவிடப்பட்டது என்று இங்குள்ள சில பிரசாரகர் தம் கைவரிசைகளைக் காட்டி ஊரவரை ஏமாற்றிவருகிறார்கள்; இத்தகைய நஞ்சு கலந்த பிரசாரங்களால், இலங்கை முழுவதற்கும் எத்தகைய கெடுதியைத் தாம்விளைக்கிறார்கள் என்பதைச் சிங்கள—தமிழ் வகுப்புவாதப் புலிகள் உணருவதில்லை. இன்று இந்த இலங்கை இன்னும் வகுப்புவாதக்குழியிற் கிடப்பதற்கு, பொறுப்பற்ற இவ்வகுப்புவாதிகள் இப்படித் தமது எண்ணப்படி பிரசாரம்புரியவிட்டமையே காரணமாகும்.

o

### நேர்மை வேண்டும்

இன்று இலங்கையில் தோன்றியுள்ள அரசியற் கட்சிகள் பெயரளவில் எல்லாம் தேசீயமயமாகவே இருக்கின்றன, எந்தக் கட்சியைப் பார்த்தாலும், "வகுப்புவாதத்துக்கு இலங்கையில் இனி இடமில்லை. இலங்கையிலுள்ள சிறுபான்மையினரும், பெரும்பான்மையினரும் ஓர்தாய் பிள்ளைகள்போல பரஸ்பரம் ஒத்துழைத்து ஒருங்கு சேரவேண்டும்'' என்றெல்லாம் இக்கட்சிகள் தங்கள் நோக்கத்தினைக் கூறுகின்றன. ஆனல் தென்னிலங்கையிலும்சரி, வட இலங்கையிலும் சரி நிகழ்வதென்ன? தேசீயவாதம் எழுதும் இதேகட்சித் தலைவர்கள் பகிரங்க மேடைகளில் பாமரமக்களின் மனக்கிளர்ச்சியைத் தூண்டிவிடுதற்காக மிகவும் கேவலமான முறையில் வகுப்புவாதம் பேசுகிறார்கள். நுனி நாக்கில் இனிப்பும், அடிநாக்கில் நஞ்சும் கொண்டுள்ள இத் தலைவர்களால்தான் எங்கள் நாடு இன்னும் சுதந்திரமாளிகையையடையாமல் தத்தளிக்கின்றது; தலைவர்களாக முன்வருவோர் மனத்தூய்மையுடையராய் தம் கொள்கையைப் பேச்சிலும் எழுத்திலும் நடைமுறையிலும் ஒரே விதமாக வைத்திருக்க வேண்டும். இந்தியாவில் மகாத்மாகாந்தி, நேரு போன்ற தலைவர்களும், ஜின்னபோன்ற இஸ்லாமியத் தலைவர்களும் இவ்விஷயத்தில் நடப்பதையாவது இங்குள்ள அரசியல் வாதிகள் கைக்கொண்டால என்ன? ஜின்ன ஓர் தடித்த வகுப்புவாதி; அவர் கொள்கை எமக்குப் பிழையாக இருக்கலாம். ஆனல் அவர் தமது வகுப்புவாதக் கொள்கையை எப்போதாவது மறைத்து வைக்கவில்லை. கடைசிவரை, அவர் அரசியல் விஷயத்தில் நேர்மையைக் கடைப்பிடித்து வந்ததை நாம் பாராட்டாமலிருக்கமுடியாது.

# ஜீ. ஜீக்கு அழைப்பு இல்லை!

## அரசாங்கசபை மகாநாட்டு விபரம்

சென்ற வெள்ளிக்கிழமை அரசாங்கசபை யங்கத்தவர்களின் மகாநாடு ஒன்று அரசாங்கசபையில் அந்தரங்க முறையிற் கூடியது என்று அறியக்கிடக்கின்றது; அந்த மகாநாட்டில் மிஸ்ரர் சேனநாயக்கா இப்போதுள்ள வேலைநிறுத்த நிலைமையைப்பற்றிப் பிரஸ்தாபித்து, இதனை அடக்க ஊரவரும் அரசாங்கமும் பரஸ்பரம் ஒத்துழைக்கவேண்டும் என்றும், இந்த நேரத்தில் சற்று இளக்காரம் காட்டினல் நிலைமை மோசமாகிவிடும் என்றும் கூறியதாகத் தெரிகிறது.

இம்மகாநாட்டுக்குப் பின்வருவோர் அழைக்கப்படவில்லை. பிலிப் பிரதிநிதி மிஸ்ரர் தகநாயக்கா, மொரவாக்கைப் பிரதிநிதி டக்ரர் எஸ். ஏ. விக்கிரமஸிங்ஹ பருத்தித்துறைப் பிரதிநிதி ஸ்ரீ ஜீ. ஜீ. பொன்னம்பலம்.

தம்மை அழையாதவிடத்தும், டக்ரர் விக்கிரமசிங்ஹ, மகாநாட்டிற் பங்குபற்றப்போனர்: ஆனல் மிஸ்ரர் சேனநாயக்கா அவரைத் தடுத்து, "உம்மை இங்கே அழைக்கவில்லை. ஆகவே திரும்பிப்போகலாம்" என்றுகூறினராம். டக்ரர் விக்கிரமசிங்ஹா திரும்பிவிட்டார்;

தான் மகாநாட்டுக்கு வரமுடியாது என்று மிஸ்ரர் தகநாயக்கா தந்தியனுப்பினராம். அழைக்காதபோது இவர் இப்படித் தந்தியனுப்பவேண்டிய அவசியமில்லை என்று மிஸ்ரர் சேனநாயக்கா கூறினர்.

### ஜீ. ஜீ. யின் அறிக்கை

அரசாங்க உத்தியோகத்தரை வேலைநிறுத்தம் செய்யும்படி தான் ஓர்போதும் புத்தி கூறவில்லை என்று ஸ்ரீ ஜீ. ஜீ. பொன்னம்பலம் ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார். அவர் இவ்விஷயமாகக் கூறுவதாவது:

"இவ்விஷயமாக என்னுடன் ஆலோசித்திருந்தால், நான் வேலைநிறுத்தம் செய்யவேண்டாம் என்றே சிபார்சு செய்திருப்பேன் ஏன்? கடைசியில் கிளாக்குமார் மிகவும் அவதிப்படுவர் என்பதனலேயே.

'இந்த விஷயத்திலும் வகுப்புப் பிரச்சினையைக் கிளப்பித் தொழிலாளர் மனத்தில் வகுப்புப்பிணக்கை யுண்டாக்கி, அவர்களுக்கிடையே வேற்றுமையைக் கொண்டுவரச் சிலர் முயற்சிக்கிறார்கள். இது மிகவும் சின்னத்தனமான விஷயம்.

'இந்த வேலைநிறுத்தத்தை நானே இரகசியமாகத் தூண்டிவிட்டேன் என்றும், திரைமறைவில் இருந்துகொண்டே நான் இந்தக் குழப்பங்கள் மூலம் முன்னுக்கு வர முயற்சிக்கிறேன் என்றும் ஊர், பெயர் நிகதியல்லாத ஓர் துண்டுப் பத்திரம் வெளிவந்திருப்பதைக் கண்ணுற்றேன். இதனைப்போன்ற எளிய பொய்ப்பிரசாரம் பிறிதொன்றில்லை. இன்றைய வேலைநிறுத்தத்துக்கும், பொருளாதாரக் குழப்பத்துக்கும் மந்திரிசபையினரின் நூதனமான கொள்கையே காரணம் என்று நான் திடமாகக் கூறுவேன்."

இந்திய அரசியல்

# பாஞ்சாலத்திற் பிரலாபம்

## ஜின்னமீது முஸ்லீம்கள் தாபம்

### ருஷிய வியாக்கியானம்

இந்தியாவில் இரண்டு டொமினியன்கள் (அதாவது பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் உள்ள சுயராஜ்ய நாடுகளை டொமினியன் என்பர்) அமைப்பது பிரிட்டிஷாரின் ஓர் சூழ்ச்சி என்று ருஷியாவின் செய்தி ஸ்தாபனம் ஒன்று தெரிவிக்கிறது. இப்போது இந்தியாவை இரண்டு டொமினியன்களாக்கி (பாகிஸ்தான் ஹிந்துஸ்தான்) அதன்பின்னர், இந்த இருநாடுகளுக்குமுரிய அரசியல் வியவகாரங்களைத் தீர்க்க நினைப்பது காலம் கடத்தும் ஓர் முயற்சியாகும்; பிரிட்டிஷார் இன்னும் பலகாலத்துக்கு இந்தியாவில் இருந்து அந்நாட்டைச் சுரண்ட இதன்மூலம் வழிதேடுகிறார்கள் என்று அச் செய்தி ஸ்தாபனம் தெரிவிக்கிறது.

●

### ஆகஸ்டு 15

வருகிற ஆகஸ்டுமாதம் 15ம் திகதிக்கு முன் இந்தியாவில் இரண்டு டொமினியன் அரசாங்கம் ஸ்தாபிக்கப்படும் என்றும் அதற்கான ஓர் சட்டம் விரைவில் பிரிட்டிஷ் பார்லிமென்றத்தில் எடுத்தாளப்படும் என்றும் தெரிகிறது.

●

### லீக்கரின் பிரலாபம்

வங்கப் பிரிவினைபற்றி வங்கத்திலுள்ள முஸ்லிம் லீக்கர் பிரலாபிக்கின்றார்கள். 'நாங்கள் உணவு கேட்டோம். பிரிட்டிஷ் அரசாங்கம் கல்லைத் தந்துவிட்டது. கீழ் வங்காளத்தில் மூலப்பொருள்கள் இல்லை. கைத்தொழில்கள் இல்லை. இப்படியான ஓர் மாகாணத்தை வைத்து நம் என்ன செய்வது'' என்று லீக்கர் இப்போது ஒப்பாரி கூறுகின்றனர்.

●

### சிந்தில் பிரிவினை இயக்கம்

சிந்து மாகாணத்தில் முஸ்லீம்களே பெரும்பான்மையினராக விருக்கின்றனர். அவர்களுடைய [illegible] போதே ஹிந்துக்களுக்குப் பாதகமாக இருக்கின்றன எனவே, அந்த மாகாணத்தில ஹிந்துக்கள் பெரும்பான்மையினராக விருக்கும் இடங்களைப் பாகிஸ்தானில் இருந்து பிரித்து, ஹிந்துஸ்தானத்துடன் சேர்க்கவேண்டும் என்ற கிளர்ச்சி ஒன்று மிகப் பலமாக அங்கே ஆரம்பமாகவிருக்கிறது. இவ்விஷயமாக, பழைய ஹிந்துமகாசபைத் தலைவர் வீரசவர்க்கார் ஹிந்து மாகாண ஹிந்துக்களுக்கு ஓர் செய்தி யனுப்பியிருக்கிறார் "பாகிஸதான் வந்தாலென்ன, விட்டாலென்ன, ஹிந்துக்கள் முஸ்லீம்களுடன் இனிஒத்து வாழ முடியாது. அவர்கள் ஹிந்துஸ்தானத்திற் சேரவே வேண்டும். ஆகவே, சிந்தில் உள்ள ஹிந்துப்பகுதிகள் அனைத்தையும் பிரித்து ஹிந்துஸ்தானுடன் சேர்க்கச் செய்யப்படும் கிளர்ச்சியைப் பலமாக்க வேண்டும். மனம் சளைக்காதபடி வேலை செய்தால் கட்டாயம் பலன் கிடைக்கும்'' என்று வீரசவர்க்கார் அச்செய்தியிற்குறிப்பிட்டிருக்கிறார்.

●

### பாஞ்சாலத்தில் நெருக்கடி

பாஞ்சாலத்தைப் பிரிப்பது அங்கிருக்கும் முஸ்லிம் லீக்கர்க்குப் பெரும்பீதியைக் கொடுத்துவிட்டது. பாஞ்சாலத்தில் முஸ்லீம்கள், சீக்கியர், ஹிந்துக்கள் என்பவர்களைக் கொண்ட கூட்டுக்கட்சி ஒன்று பரிபாலித்து வந்ததைக் கெடுத்துவிட்டு, ஜின்ன அம்மாகாணத்தைப் பாதிக்கவிட்டார் என்ற அபிப்பிராயம் லீக்கர்க்கிடையே வெகுவாகப் பரவிவருகிறது. "பாஞ்சாலத்துக்குப் பாகிஸ்தான் வேண்டாம், ஹிந்துக்களுடனும் சீக்கியருடனும் நாம் சமரசம் பேசி அதனைத் துண்டாடாமற் செய்கிறோம்'' என்று பாஞ்சாலலீக் பிரமுகர்கள் ஜின்னவைக் கேட்டார்கள் என்று தெரிகிறது வங்காளத்திலே லீக் பிரதமர் ஷஹ்ராவர்த்தி, காங்கிரஸ தலைவர்களுடன் சமரசம் பேச [illegible] அன்று அநுமதித்தார்.

அதேபோலப் பாஞ்சாலத்தில் தமக்கும் அநுமதி தரல்வேண்டுமென்று பாஞ்சாலலீக்கா ஜின்னவைக் கேட்டனராம். பாஞ்சாலம் இல்லவிட்டால, பாகிஸ்தான் ஏது? ஆகவே சமரச விஷயத்தைப் பேசவேண்டாம் என்று ஜின்ன மறுமொழி கூறிவிட்டதாகத் தெரிகிறது. நேற்றுப் பின்னேரம் நிகழ்ந்த லீக் சபையில் இவ்விஷயமும் விவாதிக்கப்பட்டிருக்கலாம் ஆனல் எத்தகைய முடிவு ஏற்பட்டது என்பது தெரியவில்லை.

# கலகத்தில் மாண்டவர்

சென்ற வியாழக்கிழமை, கொலன்னை ரோட்டில் நிகழ்ந்த கலகத்திற் சுட்டுக்கொல்லப்பட்ட ஸ்ரீ வி. கந்தசுவாமி என்னும் கிளார்க்கின் பிரேதம் சென்ற வெள்ளிக்கிழமை பின்னேரம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டது பிரேதத்தைத் தொடர்ந்து ஓர் பெரிய ஊர்வலம் சென்றது. கோட்டைப் புகைரத ஸ்தானத்தில், இறந்தவரின் தியாகத்தைப்பற்றிப் பலர்சொற்பொழிவுகள் செய்தனர். மேற்படி பிரேதம் சனிக்கிழமை மாலை யாழ்ப்பாணத்தில், இறந்தவரின் சுற்றத்தாரால் வட்டுக்கோட்டைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

ஜப்பானிலிருந்து பெற்றுள்ள 60 லட்சம் யார் துணிகளும், இம்மாதம் இலங்கைக்கு வருமென்று எதிர்பார்க்கப்படுகிறது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது இலங்கை விஜயம்

(“கோவை கிழார்”)

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

மறுநாள் புதன்கிழமை காலையில் சைவ மகாநாடு நடத்திய அன்பர்கள் பலரும் என்னைப் பார்க்கவந்தார்கள். அவர்கள் எல்லாரும் சிறந்த ஊக்கமும் அழகிய பண்பும் நிரம்பிய கல்வியும் பெற்ற இளைஞர்கள். அன்பர்களை வரவேற்பதிலும் வசதிகளைச் செய்வதிலும் வல்லவர்கள். பெரும்பான்மையோர் கலாசாலைகளில்கற்பிக்கும் ஆசிரியர்கள். அவர்களுடையமுயற்சிகளை நேரில் அறிந்து நம் தமிழ்நாட்டில் ஏன் இவ்வித உணர்ச்சி கல்வி ஆசிரியர்களிடம் இல்லை என்று சிந்தித்தேன். இங்கே உணவுப் பொருள்கள் விலை ஏற்றமாய் இருந்தபோதிலும் தகுந்த ஊதியம் கொடுக்கின்றார்கள். தொடக்கப் பாடசாலைகளில் நூறு, நூற்றைம்பதும், உயர்தரப் பாடசாலைகளில் இருநூறு இருநூற்றைம்பதும் ஊதியம் கொடுத்தால் கவலைக்கு இடம் ஏது? தென்னிந்திய பாடசாலைகளில் தொடக்க ஆசிரியர்களுக்கும் தமிழ்ப் பண்டிதர்களுக்கும் முப்பத்தைந்து நாற்பதுமாத்திரம் கிடைத்தால் எவ்விதம் பிழைப்பார்கள்? மற்ற உலக ஊழியங்களில் தலையிடமுடியுமா? மேலும் யாழ்ப்பாணத்தில் ஒரு கலாசாலை ஆசிரியர் இந்திய சிற்பத்தைப்பற்றி ஒரு விலையுயர்ந்த நூல் பதிப்பிக்கும் ஆற்றலும், அவருடையமனைவியார் இன்னிசை வீணையைப்பற்றி ஒரு சித்திரப்பதிப்பும் வெளியிடுவார்களானால் அவர்களுக்கிருக்கும் படிப்பு முதிர்ச்சி ஆராய்ச்சி வன்மை அவைகளுக்கு ஏற்ற ஒப்பு நம்நாட்டு ஆசிரியர்களுக்குக் கிடைக்குமா?

அன்றுமாலை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் சைவபரிபாலன சபையாரின் ஆதரவில் ‘பிள்ளையார் தத்துவத்’தைப்பற்றிப் பேசினேன். அங்கு வந்த பெரியார்கள் இப்பொருளை மகாநாட்டில் விடுத்திருக்க வேண்டுமென்று தெரிவித்தார்கள். எழுதிக் கொடுக்கச் சொல்லியும் கேட்டிருக்கிறார்கள். என்னை அழைத்துச் சென்ற யாழ்ப்பாணக் கலாநிலையத்திலும் அதன் செயலாளர் இல்லத்திலும் மிகவும உயர்ந்த நூல்கள் இருக்கின்றன. அவைகளை மக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியம்.

வியாழக்கிழமை மாலை ‘உடுப்பிட்டி’ சென்று ‘பெரிய புராணத்தை’ப் பற்றிப் பேசினேன். வரணி ஆதீனத்து காணைவாய் குருக்கள் தலைமை வகித்தார். திருமுறைகள் ஒவ்வொரு சைவர் வீட்டிலும் இருக்கவேண்டுமென்று நான் வற்புறுத்திப் பேசியதில் அச்சங்கச் செயலாளர் நூற்றுக்கு ஐம்பது வீடுகளில் அந்நாட்டில் திருமுறைகள் உண்டு என்றார். அதைக் கேட்டு வியந்தேன். அது உண்மையெனின் பெரும் மகிழ்ச்சிதான். சிவலோகத்திற்கு இரண்டாம் படியல் இந்நாட்டை வைக்கலாம் என்றும் நான் எண்ணியது உண்டு. அன்று இரவு வடமராட்சி மாதர் கலாசாலைக்குச் சென்றேன். அப்பாடசாலை இரண்டு ஆண்டுகளுக்குள் நானூறுபெண்களைக் கொண்டதாக ஆகியிருக்கிறது. அப்பாடசாலையின் தலைவர்கள் மிகவும் ஊக்கம் கொண்டவர்கள். ஒரு சிறுமி தேவாரம் ஓதினாள். ஆனால் அது விவிலியரின் செயற்கை ஒலிப் பாட்டுபோல் இருந்தது. முறைதெரிந்த ஒரு ஓதுவாரைக்கொண்டு இசை கற்பித்தல் நலம் என்று தோன்றிற்று.

வெள்ளிக்கிழமை மாலை காரைநகருக்குச் சென்றோம். அங்கே கருங்காலி சுப்பிரமணியர் ஆலயத்தின் உற்சவம்தொடங்கிற்று. அதுசம்பந்தமாக அவ்வூர் பாடசாலையில் ‘ஆலயமும் சமயமும்’ என்பனதைப் பற்றிப் பேசினேன். கடற்கரை ஓரத்தில் பனைமரங்களின் இடையில் கட்டப்பெற்றுள்ள இப் பாடசாலையின் அமைப்பைக் கண்டு வியந்தேன். வெறும் கல்வியேயன்றிக் கைத்தொழிலும்இங்குகற்பிக்கப்பட்டு வருகின்றது, பனங் கிழங்குகளினால் பலவித உணவுப்பொருள்கள் செய்யப்படுகின்றன என்று இங்கு அறிந்தேன். கொங்கு நாட்டில் இவைகளைக் கண்டதும் கேட்டதும் இல்லை. அன்றிரவு மாவிட்டபுரத்தில் தமிழர் சங்கத்தில் ‘தமிழ்க்கலை’யைப்பற்றி பேசினேன். இங்குதான் தேவாரம்வேண்டாம், பொதுத் தமிழ்க் கலைவணக்கமே வேண்டுமென்ற பேச்சு கேட்கப்பட்டது. ஒரு சிறுவனும் சிறுமியும் ‘வீரசுதந்திரம்’’ என்ற கீதத்தைப் பாடினார்கள், காரிருளில் சோலை நிழலில் அமைதியான கூட்டத்தில்வீரச்சுவை பொருந்திய இந்தப் பாடல் கேட்பார் நெஞ்சில் ஒரு புத்துணர்ச்சியை எழுப்பிற்று.

மறுநாள் காலை சனிக்கிழமை யன்று யாழ்ப்பாணத்தை விட்டு அநுராதபுரம் சென்றேன். யாழ்ப்பாணத்து அன்பர்கள் பலரும் புகைவண்டி நிலயத்திற்கு வந்து எனக்கு விடை தந்தார்கள். அவர்கள் காட்டின அன்பிற்கு அளவில்லை, புகைவண்டியில் எச்சரிக்கையாக இருக்கும்படி மதி சொன்னது அவர்களுடைய அன்பின் மிகுதியைக் காட்டிற்று.

யாழ்ப்பாணத்தைவிட்டு அனுராதபுரம் செல்லுவதற்குள் இரண்டுவிதமான இயற்கைக் காட்சிகளைக் கண்டேன். யானையிறவுவரைக்கும் நிலம் சமமாகவும் வேளாண்மை செய்யக்கூடியதாகவும் இருந்தது இப்பகுதி தென்மராட்சிக்குச் சேர்ந்தது. யானையிறவு கடந்ததும் இலங்கையின் பிரதமப் பகுதிகருச் செல்லுகிறோம். அனுராதபுரம்வரைக்கும் பாதைக்குஇருபுறமும் அடர்ந்த வனாந்தரம். இடையிடையில்சிறு சிறு ஓடைகள், ஊர்களாவது குடிகளாவது இல்லை, நடுப்பகலில் அனுராதபுரம் போய்ச் சேர்ந்தேன், அங்கிருந்த நண்பர்கள் என்னை வரவேற்று விவேகானந்த சபையின் தலைவர் இல்லத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அவர் சமயத் துறையிலும் மக்கள் முன்னேற்றத்திலும் அன்புடையவர். அன்று மாலை என்னை அழைத்துக் கொண்டு போதிமர விகாரை, பண்டைய அரசர் அரண்மனை பெரியதூபி முதலியவைகளைக் காட்டினார் பௌத்தர்கள் ஏராளமாக இருந்தார்கள். பலபேர் ஆலயங்களில் வணங்கினார்கள் பெரியதூபி கட்டுவதற்கு இந்தியாவிலிருந்து வந்த இந்து சிற்பிகளே வேலை செல்துகொண்டிருந்தார்கள். பண்டைய அரசர்கள் கட்டின பெரிய ஏரிகளையும் பார்த்தேன். மறுநாள் மீண்டும் புத்தர்களுடைய சின்னங்களைப் பார்க்கச் சென்றேன். அழகான சிலைகள், வசந்தகால நிலைகள், ஜலதாரைகள் கால் கழுவும் இடங்கள் முதலிய வியக்கத்தக்கவை அன்று மாலை விவேகானந்தசபையில் ‘பெண்கள் சேவை’’யைப் பற்றிப் பேசினேன்.

மறுநாள் திங்கட்கிழமை கொழும்புக்குச் சென்று அங்கிருந்து தென்கரையோரத்தில் உள்ள ‘‘காலி’’ என்ற துறைமுகத்திற்குச் சென்றேன். அங்கே நண்பர்கள் அழைத்துச்சென்று சிவலாயத்திற்கு அருகில் வசதிசெய்து கொடுத்தார்கள். அன்றிரவு சிவாலயத்தில் திருவிழா நடந்தது. மறுநாள் அங்கிருந்து புறப்பட்டு விசைவண்டியில் “திசைமாறுமை” சென்றேன் இரண்டு நண்பர்கள் என்னுடனே வந்து பெருத்த உதவி செய்தார்கள். வழிமுழுவதும் கடற்கரை ஓரமாகவே இருந்தது குளிர்ந்த காற்று, அழகிய மரங்களின் நிழல், இவைகளுக்கு இடையில் நூறுகல் சென்றோம். ஆனால் ஆயாசமே இருக்கவில்லை, பாதை முழுவதும் வீட்டுத் தரைபோல் வழவழப்பாய் இருந்தது. இப்படிப்பட்ட நீண்ட பாதைகள் தென்னிந்தியாவில் இல்லை. ‘திசைமாராமை’ ஒரு சிறந்த பௌத்த ஸ்தலம். ஒரு பெரிய ஏரியும் அதன்கீழ் பரந்த நஞ்சை நிலங்களும் இருக்கின்றன. ஏரிக்கரையில் பௌத்தருடைய வெள்ளைத் தூபி இருக்கிறது. இங்கே சிற்றுணவு அருந்தி இளைப்பாறினோம்,

அங்கிருந்து பெரிய வனாந்தரத்தின் வழியாக ஒரு காட்டுப் பாதையில் பத்துக்கல் சென்றோம். இருபுறமும் செடிகொடிகளும் குன்றுகளும் இருந்தன, இடையில் பள்ளத்தாக்குகளின் வழியாக குறுகிய பாதை சென்றது. பதினொருகல் சென்றதும் ஒரு அழகிய குளிர்ந்த நீரோடை கண்டோம் அதைத் தாண்டுகையில் மூன்றடி தெளிந்த நீர் ஓடையைக் கண்டோம் அருகில் ஒரு கம்பிப்பாலம் இருந்தது இரண்டு பெரும் மரங்களைச் சேர்த்துப் பிணைத்த ஊஞ்சல்பாலம் நீர்மட்டத்திற்கு மேல் இருபது அடி உயர்ந்திருந்தது. மழைக்காலத்தில் அப்பாலம் வரைக்கும் வெள்ளம் ஓடுமாம். இதுதான் ‘‘மாணிக்க கங்கை’’ என்ற பெயர் பெற்ற தீர்த்தம். இதன் கிழக்கரையில் ஒரு சிறு ஊர் இருந்தது. இரண்டே தெருக்கள். இரு புறங்களிலும் மடங்களும் வீடுகளும் இருந்தன. இத்தெருக்களின் மேலகோடியில்

தொடர்ச்சி [illegible] பக்கம்

## தொழிலாளர்தான் சுட்டனர்

1-ம் பக்கத் தொடர்ச்சி

தை மந்திரி மகாதேவா ஒத்துக்கொண்டு ஊரவலம், தொழிலாளர் குறித்த இடத்தை அடைந்ததும், அதில் இருந்த தொழிலாளர் பொலிசாரைத் தாக்கினர் என்றும், அதன்பயனாக ஓர் பொலிஸ் சார்ஜன்ற் காயமுற்றனர் என்றும், தொழிலாளர் கற்களாலும், போத்தல்களாலும் பொலிசாரைத் தாக்கினர் என்றும், இதனைக் கண்ட ஊர்வலத்துடன் சென்ற பொலிஸ் அதிகாரி தம்முடன் வந்த பொலிசார்க்குத் துப்பாக்கிகளை ஆயத்தமாக வைத்திருக்கும்படி உத்தரவிட்டார் என்றும் ஸ்ரீ மகாதேவா கூறி மேலும் தெரிவித்ததாவது:

‘‘பொலிசார் இவ்வளவு ஆயத்தம் செய்தும், ஊர்வலத்தில் வந்த தொழிலாளர் அடங்கவில்லை. நேர்மாறாக அவர்கள் பொலிசாரை நோக்கிச்சுட்டனர். உடனே தற்பாதுகாப்பினிமித்தம் சுடும்படி பொலிசார் ஏவப்பட்டனர். முதன்முறை சுட்டதும், தொழிலாளர்தாக்கம் சற்றுக் குறைந்தது. ஆனால் சிலநிமிஷத்தின்பின், கூட்டத்தினர் பொலிசாரை நோக்கித் திரள் திரளாக வந்தனர். உடனே பொலிசார் மீண்டும் இருமுறை சுட்டனர்.’’

## திருச்சி ரேடியோ

புதன் யூன் 11

காலை 7-15 கீதாரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7 30 திருப்புணித்துறை ஜி விச்வநாத பாகவதர் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 தச்திஇசை இசைத்தட்டு 8-30 கே ஏ ராதாபிள்ளை பாட்டு 9 முடிவு.

கதம்பம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 திருப்புணித்துறை ஜி விச்வநாத பாகவதர் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 திருப்புணித்துறை ஜி விச்வநாதபாகவதர் பாட்டு 2-.5 கோடைக்கல்வி 2.45 முடிவு.

மாலை 5 பி எஸ் சுப்புலட்சுமி பாட்டு 5-40 இசைப்பயிற்சி 5 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6-.5 கிராம நிகழ்ச்சிகள் 7 கொலைகாரன் வசன நாடகம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 அதிகான்சார் வழக்கம் 8 கே ஏ ராதாகிருஷ்ணபிள்ளை பாட்டு 8 30 பி எல் சுப்புலட்சமி பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 ஆங்கிலப் பேச்சு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் 9.45 ஐரோப்பிய சங்கீதம் 10 30 முடிவு

வியாழன் யூன் 12

காலை 7.15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 பி எல் லட்சுமி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 வாத்ய இஸை இசைத்தட்டு 8-30 மைலம் பி வஜ்ரவேலு முதலியார் பாட்டு 9 ஒலிபபரப்பு முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஏ லலிதா வீணை 2 தமிழில் செய்திகள் 2-05 ஏ லலிதா வீணை 2 15 கோடைக்கல்வி 2-45 முடிவு

மாலை 5 பி எல் லட்சுமி பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6-.5 கிராம நிகழ்ச்சிகள் 7 வாதயகோஷ்டி 7.15 செய்தி விளக்கம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 சரூர் என் சின்னசாமி ஐயர் வயலின் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 ரேடியோ நாடகஇசை 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 மைலம் பி வஜ்ரவேலு முதலியார் பாட்டு 10-30 முடிவு.

வெள்ளி யூன் 13

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 தமிழில் செய்திகள் 8 கே ராமசாமி பாட்டு 8-15 திருச்சி வாத்யகோஷ்டி 8-30 கே கொச்சம்மணி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஏ வி திரிபுர சுந்தரி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 ஏ வி திரிபுர சுந்தரி பாட்டு 2-15 கோடைக்கல்வி 2-45 முடிவு.

மாலை 5 கே கொச்சம்மணி பாட்டு 5-40 குரான்ஷரீப் விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராமநிகழ்ச்சிகள் 7 கும்பகோணம் வி சிவசுப்பிரமணியபிள்ளை சகோதரர்கள் நாசஸ்வரம் 7-30 தமிழில் செப்திகள் 7.45 தவிர்க்க முடியுமா? 8 கே ராமசாமி பாட்டு 8 30 கும்பகோணம் வி சிவசுப்பிரமணியபிள்ளை சகோதரர்கள் நாகஸ்வரம் 9 ஆஙகிலத்தில் செய்திகள் 9-15 கே எல் ஸைகால் இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்த செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-.5 வீணை வியோலா 10 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 10-30 முடிவு.

## பொலிசாரே சுட்டனர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்க அங்கு நின்ற பொலிஸ் அதிகாரியிடம் நான் சென்றேன். அப்போது என் தலையில் திடீரென இரண்டு அடிகள் வீழ்ந்தன. நான் கீழே விழ்ந்துவிட்டேன். என்னை அடித்து வீழ்த்தியவர் ஓர் பொலிஸ் அதிகாரி நான் கீழே கிடந்தபோது என்னை மீண்டும்புடைத்தனர். இதன் பின் பொலிசார் ஊர்வலத்தைத் தாக்கினர், பொலிசார் நிராயுதபாணிகளான அந்த ஊர்வலத்தினர்மீது 26 தரம்சுட்டனர். ஊர்வலத்திற் கலந்துகொண்ட தொழிலாளர் தப்பி ஓடாதபடி, பின்னால் பொலிசார் பாதுகாத்தனர். காயமடைந்தவர்களில் 19பேர் இன்னும் ஆஸ்பத்திரியில்தான் இருக்கின்றனர். அவர்களில் 5 பேரது நிலை கவலைக்கிடமானது.

‘‘காயமடைந்தவர்களுக்கு உதவியளிக்கப் பொலிசார் எவ்வகையிலாவது முன்வரவில்லை. எங்கள் கட்சியினரே ஓடித்திரிந்து கார்களைப் பிடித்துக் காயமுற்றோரை ஆஸ்பத்திரிக்கு அனுப்பினர்,

‘‘ஊர்வலத்தில் வந்தவர்கள்தான் முதலில் சுட்டார்கள் என்பது சுத்தப் பொய்.’’

டக்ரர் என். எம். பெரீரா சிறையானார் என்று வெளிவந்த செய்தி ஆதாரமற்றது என ஓர்பொலிஸ்அதிகாரி தெரிவிக்கிறார்.

## பெற்றோர்தின விழா

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிகார சபையாரின் முகாமையின்கீழுள்ள காரைநகர் இலகடி இந்துகலவன் பாடசாலைப் பெற்றோர்தினவிழா 4-6-47 ந் தேதி புதன்கிழமை மாலை ஆறரை மணியளவில் காரைநகர் இந்துக்கல்லூரிப் பிரதமாசிரியர் திரு. ஆ. தியாகராசா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பெற்றோர்களும், அன்பர்களும் சமூகமளித்தனர். தேவாரபாராயணத்துடன் விழா ஆரம்பமாயதும் முதலாவதாக செல்வி செ மகிழ்மணி தேவியால் இன்னிசை விருந்து அளிக்கப்பட்டது. இரண்டாவதாக அபிநயப்பாட்டு, கதை, மனனப் பிரசங்கங்கள், சம்பாஷணை, கோலாட்டம் முதலிய மாணவர் அப்பியாசங்கள் பல நிகழ்ந்தன. மூன்றாவதாக தலைமையாசிரியர் திரு. க நல்லதம்பி அவர்கள் பாடசாலையின் சென்றவருட அறிக்கையை வாசித்தனா; நாலாவதாக தலைவர் தமது முன்னுரையில் வருங்காலத்தில் கல்வியின் நிலைபற்றியும் ஆரம்ப பாடசாலைகளிலேயே மாணவர்களின் கல்விக்கு அஸ்திவாரமிடப்படுகிறதென்றும், அதனால் ஆரம்ப பாடசாலைகள் நல்ல நிலைமையில் நடத்தப்படவேண்டுமென்றும், அப்பாடசாலைகளில் மாணவர்கள் கல்வி கற்பதற்கு வேண்டிய வசதிகள் யாவும் அமைந்திருக்கவேண்டுமென்றும், அவ்வசதிகளை ஆக்குவதற்கு உதவி புரியவேண்டியது பெற்றோர்களின் கடமையென்றும் எடுத்துக்கூறினர்.

ஐந்தாவதாக பண்டிதர் திரு. சு. இராமசாமி அவர்கள் ‘ஔவைப்பிராட்டியார்’ என்பதுபற்றி சிறந்தவோர் சொற்பொழிவு நிகழ்த்தினர் ஆறாவதாக திரு. வே. சுப்பிரமணியம் அவர்கள் குறிப்புரை கூறினர். பின் தலைமையாசிரியர் நன்றியுரை கூறியதும் தேவாரபாராயணத்துடன் மாலை 9 மணியளவில் இனிது நிறைவேறிற்று.

## சுப்பிறீம்கோட் நீதியரசர்

மிஸ்ரர் R. R. குரூசெற் தம்பையா அவர்களும், மிஸ்ரர் E. H. T. குணசேகரா அவர்களும் கூடியசீக்கிரத்திற் சுப்பிறீயகோட் நீதிபதிகளாக நியமிக்கப்படுவர் என்று ஓர் செய்தி கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராணக் கவி நுட்பம்

## திருவிளையாட்டுப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் வாய்க் கேட் டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளிபிடப்பட்டுள்ளன.

மண்ணிடை யுலாவுநெடு மாதிர முலாவும்
எண்ணிடை யுருதகட லெங்கணு முலாவும்
விண்ணிடை யுலாவுமதி வெய்யவ னுடுக்கோள்
கண்ணிடை யுலாவுமிறை கண்ணில்வரு மண்ணல்

பரமசிவனுடைய நெற்றிக்கண்ணிற் பிறந்த பெருமையிற் சிறந்த முருகக்கடவுள் இப்பூமியில் உலவுவார்; பரந்த எட்டுத்திக்கிலு முலாவுவார்: அளவிடமுடியாத கடலின் கண்ணே யுலாவுவார்: அந்தரத்திலே யுலாவுவார்: சந்திரன் சூரியன் நட்சத்திரங்கள் கிரகங்கள் என்னுமிவற்றின் மண்டலங்களிலும் உலாவுவார் என்பது கருத்து.

நெடுமாதிரம்—திகந்தம்; விண்ணிடையுலாவுமதி வெய்யவனுடுக்கோள் கண்ணிடையெனக் கொண்டு, ஆகாயத்திற் சஞ்சரிக்கின்ற சந்திர சூரிய நட்சத்திர கிரக மண்டலங்களில் எனப் பொருள்கோடலு மொன்று; கண்ணிடை யென்பதிற் கண்ணேழாம் வேற்றுமையுருபு.

[எண்ணிடையுருத-அளவுபடாத; உடுக்கோள்கள்-இவர்களது பதவி] (6)

கந்தருவர் சித்தர்கரு டத்தொகைய ரேனோர்
தந்தமுல காதிய தலந்தோறு முலாவும்
இந்திர னிருந்ததொல் லிடந்தனி லுலாவும்
உந்துநவர் வைகுமுல கந்தோறு முலாவும்

(இறைகண்ணில் வரும் அண்ணல்) கந்தருவர் சித்தர் கருடர் ஏனைத் தேவ வருக்கத்தினர்களின் உலகங்கள் முதலியவற்றில் உலாவுவார்; இந்திரன் அரசுபுரிந்திருந்ததாகிய பழைய சுவர்க்கலோகத்திலும் உலாவுவார்; மேலான பதவியிலிருக்குந் தவத்தையுடையவர்களாகிய முனிவர்கள் வாழும் உலகங்களிலும் உலாவியருள்வர் என்பது கருத்து.

முருகமூர்த்தி யுலாவியருளும்போது, இந்திரன் சூரபன்மனுக்குப் பயந்து விண்ணுலகைவிட்டு மண்ணுலகிலுள்ள சீகாழிப்பதியிலும் மேருமலையிலும் மறைந்திருந்தானாக, விண்ணுலகமுஞ் சூரபன்மனுடைய ஆட்சியுட்பட்டதாதலின், "இந்திரனிருந்த தொல்லிடந்தனில்" என்றார். உந்துதவம்—மேலான பதவியில் உய்க்கும் தவம்.

[தவர் வைகுலகம்-தவலோகம், மகர்லோக மென்பன] (7)

அங்கமல நான்முக னரும்பத முலாவும்
மங்கல நிறைந்ததிரு மால்பத முலாவும்
எங்களபெரு மாட்டித னிரும்பத முலாவுந்
திங்கண்முடி மேற்புனை சிவன்பத முலாவும்.

அழகிய செந்தாமரைப் பூவிலிருக்கும் பிரமதேவருக்குரியதாகிய சிறந்த சத்தியவுலகத்தில் உலாவுவார்; மங்கலத்தோடு கூடிய விஷ்ணுமூர்த்தியின் பதவியாகிய வைகுண்டவுலகத்திலும் உலாவுவார். எங்கள் தாயாகிய உமாதேவியாரெழுந்தருளிய மேலான சத்தியுலகத்திலு முலாவுவார்; சந்திரனைச் சடைமுடியிலே தரித்தருளிய பரமசிவனெழுந்தருளிய சிவலோகத்திலும் உலாவுவார் என்பது கருத்து.

இறைகண்ணில் வருமண்ணல் என்பதையே இங்கும் எழுவாயாகக் கொள்க; இலக்குமி வசிக்குமிடமாதலாலும், திருமால் காவற்கடவுளாதலாலும், 'மங்கல நிறைந்த' என்றார்; பெருமான் என்பதன் பெண்பாற்சொல் பெருமாட்டி; மேலான தலைவியென்பது பொருள்; "உத்தம சத்திமாருள் உத்தமி யுருத்திராணி" யாதலினாலும், சகல சராசரங்களையும் பெற்றுப் பேணுபவள் பரமேசுவரி யாதலினாலும், உயிர்களாகிய நாமனைவோரும் அந்த இறைவியின் குழந்தைகளாதலாலும், "எங்கள் பெருமாட்டி" யென்றார். முன்னர் இப்படலத்திலுள்ள ரு-ம் திருவிருத்தத்தில் "தந்தையுடன் யாயமர் தலங்களி னுலாவும்" எனக் கூறி, இங்கே "பெருமாட்டி பதமுலாவும்.......சிவன்பத முலாவும்" எனல், கூறியது கூறலென்னுங் குற்றத்தின் பாற்படாதோவெனின் அற்றன்று; முன்னர்க் கூறியது இறைவனும் இறைவியும் இவ்வுலகி லெழுந்தருளிய தலங்களையாகும்: இங்கே கூறியது சத்தி பதவியையும் அதற்கு மேற்பட்ட சிவபதவியையு மென்க.

[எனவே, சோபான முறைபால் ஒன்றற்கொன்றுயர்ந்த பதவிகளில் உலாவுவாரென்பது பெறப்படலாயிற்று.] (8)

இப்புவியி லண்டநிரை யெங்கணு முலாவும்
அப்புவழ லூதைவெளி யண்டமு முலாவும்
ஒப்பில்புவ னங்கள்பிற வுள்ளவு முலாவும்
செப்பரிய வோர்பர சிவன்றனது மைந்தன்.

சொல்லுதற்கரிய பெருமையோடுகூடிய சிவபிரானது ஒப்பற்ற திருக்குமாராகிய முருகவேள் இப்பிருதிவியின் கூறாகவுள்ள அண்டங்களடங்கலும் உலாவுவார்; நீர் தீ காற்று ஆகாயமென்னும் ஏனைய நான்கு பூதங்கட்குமுரிய அண்டங்கள்தோறு முலாவுவார்; ஒப்பற்ற புவனங்களிலும் பிற தத்துவ அண்டங்களிலு முலாவுவார் என்பது கருத்து

[ஒப்பற்ற புவனங்களிலும், பிற தத்துவ அண்டங்களிலு முலாவுவார்: முப்பத்தாறு தத்துவங்கட்கும் அதீதராயிருத்தலினால் அத்தத்துவாண்டங்களிலும் உலாவினரென்பதாம்.] (9)

---

இலங்கை இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ள ஸ்ரீஜஸ்டிஸ் வி. வி கிரி இன்னும் சில தினங்களில் புதுடெல்கிக்குச் சென்று பண்டிதர் ஜவஹர்லாலைக் கண்டு, இந்தியா—இலங்கை விஷயமாகச் சம்பாஷித்துவிட்டு ஜூன்மாத முடிவில் இலங்கைக்கு வருவர் என்று ஓர் செய்தி கூறுகிறது.

கொழும்பு நகரசபைஎல்லைக்குள் ஜூன் மாதம் 6-ந் திகதி தொடக்கம் 14 நாட்களுக்குஎவ்வகையான ஊர்வலமும் கொண்டு செல்லக்கூடாதென இலங்கைப் பொலிஸ் தலைவர் ஒரு தடையுத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

* *

ஐரோப்பா, ஆசியா என்னும் கண்டங்களில் யுத்தத்தினால் கஷ்டமடைந்த நாடுகளுக்குச் சகாயஞ் செய்ய 35 கோடி டாலர் அமெரிக்கா உதவுவதை ஜனாதிபதி ட்ரூமேன் ஊர்ஜிதஞ் செய்துவிட்டார்.

## எனது இலங்கை விஜயம்

4-ம் பக்கத் தொடர்ச்சி

ஒரு பண்டைய ஆலயம் தோன்றிற்று இப்புனித இடம்தான் "வனமுறை வேடன் அருளிய பூஜை மகிழ் கதிர்காமம்" ஆகும். உலகப்பிரசித்திபெற்ற இந்தத் தலத்தை வணங்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அன்றும் மறுநாளும் முருகப்பெருமானை வணங்கும் திருவருள் எனக்கு வாய்த்தது. அருணகிரிநாதர் திருப்புகழ்பெற்ற இத்தலத்தை தரிசிக்கும் வாய்ப்பு கிடைத்ததே போதுமல்லவா?

மறுநாள் கதிர்காமத்தைவிட்டுப் புறப்பட்டு 'காலி' வந்து சேர்ந்தோம். அங்கே சிவாலயத்தில் பெரிய உற்சவம் நடந்தது. மேளம், மின்சாரம், பாணம், முதலியவைகள் ஒரு இரவிலே ஆயிரத்தைந்நூறு ரூபாய் விழுங்கிவிட்டன. மறுநாள்காலை மட்டும் கண் உறங்காது இந்தத் திவ்விய கோலாகலங்களில் அங்கிருந்த சைவமக்கள் ஈடுபட்டிருந்தார்கள் இதன் நடுவில் ஒருமணிநேரம் அவர்களுடைய கவனத்தை நான் கவர்ந்துகொண்டேன். சமயம் என்னும் பொருள்பற்றி பேசி அங்கு நடந்த விதிக்கு ஒரு விலக்கு தேடிக்கொண்டேன். இது யான் செய்த பாக்கியம்.

மறுநாள் விடிந்ததும் புகைவண்டி ஏறி கொழும்பு சென்றேன். அங்கே விவேகானந்தசபையார்கள் வரவேற்று உபசரித்தார்கள். அச்சபைக்கு ஒரு பெரிய நிலையம் உண்டு. அதில் ஒரு பிரசங்கசாலை, பாடசாலை, புத்தகசாலை, வாசகசாலை, மாணவர் விடுதி, பூஜையறை முதலியவைகள் உண்டு. இதனை மேலும் உயர்த்துவதற்காக உத்தேசித்திருக்கிறார்கள். இதனைப் பரிபாலிக்கும் பெரியார்கள் படித்தவர்களாகவும் பெரிய உத்தியோகத்தில் உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். மிகவும் அன்போடு என்னை உபசரித்தார்கள். அன்று மாலை "வெளிநாட்டில் தமிழர் நாகரீகமும் சமயமும்' என்னும் பொருள்பற்றிப் பேசினேன். மிகவும் கூர்மையோடு அதனைக் கேட்டார்கள் பேச்சு முடிந்ததும் ஊருக்குத் திரும்பினேன்

இவ்விதமாக பதினெட்டு நாட்கள் இலங்கையில் பல இடங்களிலும் சுற்றிப் பதினைந்து பேச்சுகள்வரை நிகழ்த்தினேன். இத்தனை செயல்களையும் தொடர்ந்து செய்வதற்கு வேண்டிய வசதிகள் யாழ்ப்பாணத்துச் சைவத்தமிழர்கள் உதவி புரிந்தார்கள். பேரன்பு நிறைந்த அவர்கள் உதவி இல்லாமல் போயிருப்பின் இத்தனை செயலும் என்னால் செய்திருக்க முடியாது. இதற்காக அன்னார்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றி உரித்தாயது.

## விவாக விஞ்ஞாபனம்

### சம்பந்தநாதன்—திலகவதி

வண்கிழக்கு நீராவியடி திரு. S M. இராமநாத ரவர்களின் புதல்வரும் கொழும்பு மொத்த வியாபாரஸ்தானத்தில் உத்தியோகம் வகித்திருப்பவருமாகிய திரு சம்பந்தநாதன் அவர்களுக்கும், நவாலி வடக்கு திரு. C. நவரத்தினமவர்களின் புதல்வியாகிய திருவளர்செல்வி திலகவதி அம்மாளுக்கும் இந்த யூன்மாசம் 13-ந் உ வெள்ளிக்கிழமை இரவு 11 மணிவரையில் நிகழும் சுப முகூர்த்தத்தில் மணமகளில்லத்தில் விவாகம் நிறைவேறும். சுற்ற மித்திரர்களாயுள்ளவர்கள் அச்சமயங்களிற் சமூகஞ் செய்வார்களாக.

அடுத்தநாள் பிற்பகல் 4 மணி வரையில் நீராவியடியிலுள்ள மணமகன் வீட்டில் உபசாரணைக் கொண்டாட்டம் நடைபெறும்.

வண்-கிழக்கு.
(M. 55.—10-6-47)

## ஆங்கில இந்துசாதனப் பத்திராசிரியர்

சென்ற சில மாசங்களாக இந்து சாதன ஆங்கிலப் பத்திரிகையின் பிரதியாசிரியராகக் கடமையாற்றி வந்த பிரபல நியாயதுரந்தரர் திரு. தமுத்துச்சுவாமிப்பிள்ளையவர்கள் சென்ற ஞாயிற்றுக்கிழமை (8-6-47) கூடிய சைவபரிபாலனசபை நிர்வாகக் கூட்டத்தில், மேற்படி பத்திரிகையின் நிரந்தர கௌரவ பத்திராசிரியராக நியமிக்கப்பெற்றுள்ளா ரென்பதை அபிமானிகட்கு மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேம்.

---

இந்தப் பயணத்தில் பல அரிய செய்திகளை அறிந்தேன். தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு பலப்புதுக்கருத்துகள் சென்றுகொண்டிருக்கின்றன அவைகள் முன்னிருந்த தூய்மையான நிலைமையை சிறிது சிறிதாக மாற்றிக்கொண்டு வருகிறதாகத் தெரிகிறது. அக்கருத்துக்களைக் கொண்டு செல்லும் ஆட்களும் ஊதியம் பெறுகிறார்களாம். இது விந்தைதான். நாட்டு சமூகத்தின் உயர்வையே குறிக்கோளாக மக்கள் கொள்ளவேண்டும். அதற்கு எதிரிடையான கருத்துக்களைத் தள்ள வேண்டும். அவ்விதம் செய்வது சைவமக்களின் கடமையாகும். தங்கள் சமய நிலையங்களை புனித நிலையங்களாக வைத்துக் கொள்வார்களாக!

# பலியிட வேண்டாம்

சென்றவருடம் பனிப்புலம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் சந்நிதியில் ஆட்டுக்கடாக்கள் பலியிடுதலை அவ்வூர் இளைஞர்களும், அறிவில் முதியோரும் ஏகோபித்து நிற்பாட்டியுள்ளனர்.

இவ்வருடம் வெளியூரினின்றும் வந்த சிலர் பலியிடுதலை நிற்பாட்டுதல் மகாபாவம் என்றும் தேவிக்குப் பலி இடாவிடில் ஊரில் பல அநர்த்தங்கள் விளையும் என்றும், வாய்ப்பறை சாற்றுகின்றனர். அந்தோ! இவர்கள் அறியாமை இருந்தபடி என்னை? உயிர்கள் எல்லாவற்றையும் படைத்து இரக்ஷிக்கும் ஸ்ரீமுத்துமாரி அம்மன் சந்நிதியில் கதறக் கதறக் கொலை செய்வது எவ்வளவு அறிவீனம்? தமது முன்னிலையில் தமது மக்களை ஒருவன் கொலைசெய்யும்போது இவர்கள் மனம் சகிப்பார்களா? சிந்திக்க.

சென்ற ஆண்டு புரட்டாதிமீ விஜயதசமி அன்று அவ்வூர் இளைஞர்கள் ஒன்றுகூடிப் பல பெரியாரின் உதவிகளைப்பெற்று "இளைஞர்தேசிய இயக்கம்" என்னும் பெயருடன் ஓர் சங்கத்தையும், "தேசிய வாசகசாலை' என்னும் ஓர் வாசகசாலையையும் ஸ்தாபித்துள்ளனர். ஷை வாசகசாலையைத் திரு. ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை திறந்துவைத்தனர். அன்று தொடக்கம் மாதந்தோறும் அவ்வாசகசாலையில் பலபெரியார்கள் இவ்வருடம் முதல் தாசியர்நடனம் என்னும் கச்சேரி வைக்கப்படாதென வற்புறுத்திச் சொற்பொழிவாற்றினர். ஷை ஸ்ரீ முத்துமாரி அம்மன்கோவில் உற்சவம் இவ்வாண்டு வைகாசி மீ 22ந் உ வியாழக்கிழமை ஆரம்பமாயது. இன்றுவரை இன்னும சதுர்க்கச்சேரி நடைபெறவில்லை. இவ்விதமே அடுத்த திருவிழா உபயகாரர்களும் சதுர்க்கச்சேரியை ஏற்பாடு செய்யாமலிருப்பார்கள் என நம்புகிறோம் என்று ஓர் அபிமானி எழுதுகிறார்.

---

### தென்மயிலைச் சன்மார்க்கசபை குரும்பசிட்டி

### 13-வது வருடாந்தக் கூட்டம்

நிகழும் சர்வசித்து வருஷம் வைகாசி மாதம் ௧௮-ந் திகதி (1-6 47) ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணியளவில் ஷை விழா சபைத்தலைவர் திரு. நா. பொன்னையா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அத்தருணம் பண்டிதை தம்பு இராஜேஸ்வரி அவர்களால் 'கவியின்பம்' என்னும் பொருள்பற்றியும் ஸ்ரீமதி M. A. சாரதாம்பாள் M. A. அவர்களால் 'சமரச சன்மார்க்கம்' என்னும் பொருள்பற்றியும் விரிவுரைகள் நிகழ்த்தப்பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரசித்த விளம்பரம்

பிறிமியர் ரெட்டிச்சாய்ப்பின் கிளை ஸ்தாபனம் ஒன்று காங்கேசன் துறையிலே, யாழ்ப்பாணம் — காங்கேசன்துறைப் பெருந் தெருவிலுள்ள 210-ம், இலக்க இல்லத்தில் நிகழும் 1947—ம் ஆண்டு ஆனிமாசம் 11-ந் திகதி புதன்கிழமை திறக்கப்படும்.



அனைவோரும் இதனை ஆதரிக்கும்படியாய் பரிவாகக் கேட்கப்படுகின்றுர்கள்.

# பிறிமியர் பேக்கறி

(1865-ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது)

பேதுருப்பிள்ளை ரெட்டிச்சாய்ப்பெனப் பிரஸ்தாபமாக அறியப்படுவது

ரெட்டி, பிஸ்கற்வகைகள், கேக்குகள் செய்து கொடுப்பதில் முதன்மைவாய்ந்தது

யாழ்ப்பாணமும், காங்கேசன் துறையும்

பேக்கறி, டெலிபோன்: யாழ்ப்பாணம், 44.

ஸ்ரோர்ஸ் & கவே, டெலிபோன்: யாழ்ப்பாணம், 63.

Std 22 6 6-47—6-7-47.



## பசந்த லேகியம்

இதனுல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருருத்தல் விலை ரூபா 25
அரைருத்தலுக்கு ரூபா 12-50
கால்ருத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை

இ. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to , 1—4—48



நாகப்பட்டணம் மார்க்கம் சிங்கப்பூர், பினங் கப்பல்

## புறப்படுந் தேதி

கொஸ்ரே — 18-6-1947
ருஜாலா — 2-7-1947
கொஸ்ரே — 16-7-1947
ருஜாலா — 30-7-1947

தற்கால நெருக்கடியைச் சமாளிப்பதற்கு ஏற்ற சௌகரியங்கள் செய்வதற்குத் தகுந்த அவகாசமளிக்கும்நோக்கத்துடன் எம்மிடம் பிரயாணச் சீட்டுப் பெற விரும்புவோர் உங்கள் பெயரைத் தாமதமின்றிப் பதிவு செய்துகொள்ளுங்கள்

எஸ். ஆர். எஸ். நாதன்

15. சிவப்பிரகாசம் ரோட், ஐயனர்கோவிலடி :: வண்ணர்பண்ணை

Std 23. 6-6-47—6 6-48



தமிழ் ஆசிரிய தராதரப் பத்திர பரீக்ஷை 1947-ம் ஆண்டு ஆகஸ்டு 11உ

## தபால்மூலம் கல்வி

தபால்மூலம் நாம் பின்வரும் பாடங்களைப் போதிக்க வல்லேம்:

1. படிப்பிக்கும் விதிகள்
2. படிப்பிக்கும் முறைகள்
3. சுகாதாரமும் தேகப்பயிற்சியும்
4. பாஷையும் வியாசமும்
5. இலக்கியம்
6. பூமிசாஸ்திரம்
7. சரித்திரம்
8. பாடீகணிதம்
9. உயர்தரகணிதம்
10. நாட்டுச்சீவனசாஸ்திரம்.

எங்கள் பாடமுறைகள், தமிழ்ப்போதன கல்லூரிகளில் மிகுந்த அநுபவமும் தேர்ச்சியும் பெற்றுள்ள சிறந்த ஆசிரியர்களால் வகுக்கப்படுவன. சென்றமுறை நிகழ்ந்த பரீட்சைக்கு, பன்னூற்றுக் கணக்கான மாணவர்கள் எம்மிடம் படித்து, எங்களுடைய உந்நத முறையைப் பாராட்டியுள்ளார்கள். சென்றமுறைப் பரீட்சையில் வெளிவந்த வினுக்களில் அநேகமானவை, எங்களுடைய பாடங்களின்போது எங்கள் மாணவர்களுக்கு நாம் கொடுத்த பரீட்சை வினுக்களில் அடங்கியிருந்தமை ஈண்டுக் குறிப்பிடத்தக்க ஓர் விசேஷ அம்சமாகும்; எங்களைச் சேர்ந்து, எங்கள் உதவியைநாடும் மாணவர்களுக்கு அவர்கள் பரீட்சையிற் சித்தியடைவர் என்று உத்தரவாதம் அளிக்கிறேம். எங்களிடம் இருந்தே ஒவ்வொரு பரீட்சார்த்தியும் கற்றுத் தேறவேண்டும் என்ற அவாவினுல், நாங்கள் இதுவரை விதித்துவந்த வேதன விகிதத்தையும் குறைத்திருக்கிறேம்.

தயவுசெய்து இன்றே விபரங்களுக்கு எழுதுக.

Atlas Hall
Postal School
723, Maradana Rd,
Colombo.

அற்லஸ் ஹால்,
723, மருதானை ரோட்,
கொழும்பு.

Std 19, 27—5—26-8-47.



## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆடு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பண ரூபா

**134,3670**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிருப்பர்.

Std. 14 20-11-46—20-11-47 (தி)



## விசித்திர விஸ்வகர்மாச் சித்திரம்

கண்கவரும் காட்சிவிருந்து அளிக்கும்

மாட மாளிகை வடிவச் சிகரமும்

வானத்தில் மின்னும் வெள்ளிகள்போன்ற மின்சார வெளிச்சமும்

புதிதாய் நயமாய் புனிதமாய் அமைக்கப்பெற்றது

திருவிழாக்களுக்கும் கல்யாணப் பந்தர்களுக்கும் கவியாட்ட முன்றில்களுக்கும்

அழகும் அலங்காரமுஞ் செய்ய உபபோகப்படுகின்றன

எம். சுப்பிரமணியம்,
மரமாளிகை, மல்லாகம்,
(சொந்தக்காரர்)

Mis 50 6&10-6-47


## இந்துசாதனம்

### ஆங்கில-தமிழ்ப் பிரசுரங்கள்

பத்திரக்கிரயம் (முற்பணமாக ஒருவருடத்திற்கு)

| | யாழ்ப்பாணப்பட்டின எல்லைக்குள். ரூ. ச. | வெளியூர். ரூ. ச. | மலாய்நாட்டுக்கு ரூ. ச |
|---|---|---|---|
| இந்துசாதனத் தமிழ்ப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இந்துசாதன ஆங்கிலப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இரு பிரசுரங்களுஞ் சேர்ந்து | 10—50 | 13—50 | 15—00 |

பத்திரக்கிரயம் முதலிய பண விஷயம் எதுவும், இந்துசாதன மானேஜருக்கே அனுப்டப்படல் வேண்டும்.

மனேஜர், இந்துசாதனம், வண்ணர்பண்ணை.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by Pandit V. T. Sambandhan, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Tuesday, June, 10, 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org